தென்னகம்

ஆசிரியர் : K. A. மதியழகன்

மலர் - 1 | 4 - 12 - 59 வெள்ளி | இதழ் - 46

★

30-11-59

திங்கட்கிழமை

மாலை 7-47

மணி.

★

சென்னை

நகர மன்ற

மேயர் அறையில்

★

அறிஞர் அண்ணா

அவர்களின்

திருவுருவப் படத்தின் கீழ்

புதிய மேயர்

அப்துல்காதர்

துணை மேயர்

தேவராசன்

★

ஆறு நாயகிகள்!

பனி ஓலை!

(நாயகி ஒன்று)

அழகிய இளவேனிற்காலம் வந்தது. இலவங்கக் கொடிகளாலுண்டான புதரின் இலைகளெல்லாம் மெல்ல ஓசைபடாமல் உதிர்ந்தன. அப்புதரின்கண்ணே ஒரு பூவை நல்லாள் பெருமூச்செறிய நின்று கொண்டிருக்கிருள். இலவங்கொடியின் இலைகள் மெல்ல நழுவுவதுபோல இம் பூங்கொடியாளின் கண்களினின்றும் துளிகள்நழுவுகின்றன! இலைகள் உதிர்வதைக் காண்கிருள். இன்பம் பயக்கும் இளவேனிற்காலம் வந்துவிட்டதை இக் காட்சி அவளுக்குஉணர்த்துகிறது. சுகவனர் மலைச்சாரலில் நின்றுகொண்டிருக்கும் இந்த நாயகியின் கண்கள் நீரை ஒழுக விட்டன. ஒளிவீசும் அவள் மலர்க்கன்னங்கள் பனி ஓலையைப்போல் வெளுத்துவிட்டன. இவளைப் பாங்கி காண்கிருள். "இவள் நிலைக்குக் காரணம் என்ன? இவள் கருத்தோ தெரியவில்லையே" என்று திகைக்கிருள்.

வன்ன வசந்தம்புக விலவங்க
வல்லிப் புதரின்
பன்ன முதிர்ந்தன பார்த்தலுங்
கண்புனல் பாய்ந்தவன்றி
யென்ன லமுங் கொள் சுகவனர்
வெற்பிவ ளெண்ண மென்னே
மின்ன னுவும் பனி யோலையைப்
போல வெளுத்தனவே.

தாமரை பூத்த குளம்!

(நாயகி இரண்டு)

தாமரை பூத்த குளத்திடையே முகத்தாமரை தோன்ற நீராடிக் கொண்டிருக்கிருள் ஒரு பெண். அத்தடாகத்திலே குவளை மலர்கள் பூத்துள்ளன. பாசி படர்ந்துள்ளது. மூழ்கி மூழ்கி விளையாடிக் கொண்டிருக்கிருள் அந்தப் பெண். மைதீட்டப்பெற்ற கண்கள் சிவந்துவிட்டன. கரையேறுகிருள். களிப்பு மிகுதியால் காதுவரை நீண்டு பரவிய கண்கள் அசைந்து கொண்டிருக்கின்றன. நீராடியதால், குளத்திலுள்ள குவளை மலர்கள் முகத்தில் ஒட்டிக்கொண்டனவோ என்று நினைத்து தன் கண்களைத் தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கொள்கிருள். குவளையை ஒத்த கண்களல்லவா! அதுமட்டுமா? பருவத்தின் எழிலிலே நிற்கும் இவள், குளத்தில் படிந்துள்ள பாசி எங்கே தன் உடலிலே ஒட்டிக் கொண்டதோ என்று தன் வயிற்றின் பசிய மயிரொழுங்கினை நகங்களால் தள்ளுகிருள். பாசியாக இருந்தாலல்லவா அது உடலைவிட்டு நீங்கும்! அதுபாசி அல்ல என்று உணர்கிருள். அஃதோடன்றி தன் மேனியிலே புதிய பொலிவும், பூரிப்பும் ஏற்பட்டிருப்பதை அறிகிருள்! "இதன் காரணம் என்ன...?" தன் தோழியை மெல்லக் கேட்கிருள். தோழி என்ன சொல்வாள்?...! அந்த நாயகி அறியாமலே பருவம் அவள் உடலிலே எழிலைத் தீட்டியிருக்கிறது. இந்த காட்சியைக் கவிஞர் எழில்படக் காட்டியுள்ளார்.

சலமூழ்கி. நின்றுவப்பாற் செவிமென்
றசைதன் கணைக் கா
ரலரோ வெனத்தொடு மங்கவுரோம
வணியைச் சை
வலமோ வென்றே விலக்குங்
கடிபார மதித்து வகை
மெலவே வினவுஞ் சகியைச்
சுகவனர் வெற்பணங்கே.

தாமரைக் குடை!

(நாயகி மூன்று)

"பெண்ணே! சுகவனர் வெற்பில் வெய்யவன் கதிர்பட்டால் உன் மேனி வாடி விடு மென்று, தடாகத்திலுள்ள தமரை மலர்களைப் பறித்து வந்து, உனக்குக் குடையாகப் பிடித்து, நிலத்தின் பொடி பட்டால் நின் அனிச்ச மலர்ப் பாதங்கள் நோகும் என்று நறுமணமிக்க பனிநீரைத்தெளித்துப் பணிபல பூண்டு வருகின்ருன் உன் நாயகன். இப்படியிருந்தும் இளமையழகுடைய பெண்ணே நீ உலையில் காய்ந்த வேல்போல் சிவந்த கண்களைக் கொண்டு அடிக்கடி உன் நாயகனை ஏன் மிரட்டுகின்ருய்" என்று தோழி நாயகியைப் பார்த்துக் கேட்கிருள்.

கதிராலுடல் வருந்தும் பொடியாற்
பதங் கன்று நிற்கென்
றெதிர் தாமரையைக் குடையா
வெடுத்து மண்ணெங்கு மண
முதிர்நீர் தெளிக்கும் பதியைச்
சுகவன மூர்த்தி வெற்பிற்
கொதிவே லெனச் செங்கண்
கொண்டுமிரட்டலென் கோமளமே!

சிற்றிடை இல்லை!

(நாயகி நான்கு)

எழில்மிக்க மணமலர்களை அவள் தன் கொண்டையிலே முடித்துக் கொண்டிருக்கிருள். அவன் மனத்திலே மையல் தீயெளக் கிளர்ந்துள்ளது. காதல் வேட்கையால் அவள் உடலில் வெம்மை ஏற்பட்டுள்ளது. அவ் வெம்மையின் காரணமாகத் தலையிலுள்ள மலர்கள் கூட வாடிவிட்டன். காதலின் தன்மை இன்னது என்பதை அம்மலர்கள் வாடி பிறருக்கு எடுத்துக் காட்டுகின்றன. நிலவு நெருப்பாவதும், தென்றல் புலியெச் சீறுவதும், பூசும் சந்தனம் உடலின் வெப்பத்தை மிகுதிப் படுத்துவதும், மலரணை முள்ளெனத்தைப்பதும் காதல் மயக்கங் கொண்ட காரிகையருக்கு இயற்கையல்லவா? அது போலவே இவள் நிலையும். கொண்டை மலர் வாடியது. கெண்டை மீனை யொத்த விழிகள் இமைக்கின்றன. அது எப்படி இருக்கிறது. கவி கூறுகிருர்; எதிரே வருகின்றவர்களுடைய மனத்தைக் கொள்ளையிட்டு உட்கொள்வனபோல், இமைகள் மூடிப் பின் வெளியே விடுவன போல் திறக்கின்றன. தலைவன் இவளைக் காண்கிருன். புரிகிறது அவள் நிலைமை. அவன் எண்ணுகிருன். "இவளுடைய சாயலோ மயிலைப் போன்றது. சொல்லின் செய்கையோ குயிலையொக்கும். ஆனல் சிறிய இடையொன்று மாத்திரம் இல்லை" என்று!

மயலா லுளத்துள வாட்டத்தைக்
கூந்தன் மலருணர்த்தக்
கயலாய பார்வை யெதிர்ந்தோ
ரறிவைக் கவர்ந்துவிட
புயலூர் சுகவனர் வெற்பிற்
பொலியுமிப் பூவை தன
தியலோ மயில் சொற் செயலோ
குயில் சிற்றிடை இல்லையே

முத்துக்கள் மாணிக்கமாயின!

(நாயகி ஐந்து)

அகப் பொருள் இலக்கணத்தில், கற்பில் நிகழும் பிரிவினை வகையுள் பரத்தையிற் பிரிதல் என ஒருபிரிவுஉண்டு. தலைவன், தலைவியை விட்டுப் பிரிந்து சென்று பரத்தையுடன் சோலை செல்லுதலும், புனலாடுதலும் போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதுண்டு. சங்க இலக்கிய

அயிந்தன்

மாகிய '[illegible]நூறு' என்ற நூலில் இ[illegible] நிகழ்ச்சிகள் வருகின்றன.

தலைவியைப் பிரிந்து சென்று பரத்தையுடன் இன்பக் களியாட்டினை முடித்து விட்டு இல்லம் வருகிருன் தலைவன். தலைவி தன் அறிவின் திறத்தால் (உள்ளுறை யுவமம்) தலைவனின் செய்கையினைக் கண்டிக்கிருள். நேரடியாக அல்ல; மறைமுகமாக! நாடனே!...என்று விளித்துக் கூறுகிருள். நாட்டின் வளப்பத்தைக் கூறுவதன் மூலம் நாயகன் செயலினை உணர்த்துகிருள். நீர் நாய்களுக்கு வாளை மீன்கள் விருப்பமானஉணவு. ஆகையால் அந்த நீர் நாய்க்கள் வாளை மீன்களைத் தேடி நீர்த்துறைகளிலே சுற்றிக் கொண்டிருக்கும். அதன் காரணமாக அந்த நீர் நாய்களிடத்தே புலால்நாற்றம் வீசுகிறது. இத்தகு வளப்பமுடைய நாடனே! — என்று கூறுகிருள். இதிலே புலால்நாற்றமுடைய நீர் நாய் வாளைமீன்களைத் தேடிச் செல்வதுபோன்று பரத்தையைத் தேடிச்சென்று அவர்களை கலந்ததால் ஏற்பட்ட குறிகளுடன் தலைவன் வருதலைக் காண்கிருேம்!

ஆனல் கவிஞரின் சிங்கார ரச மஞ்சரி நாயகியோ நாயகன் வந்தவுடன் ஒன்றும் பேசவில்லை. அவள் கண்களின் பார்வையே அனைத்தையும் பேசி முடித்து விட்டது. நாயகன் அவளை நிமிர்ந்து காண வெட்க[illegible]றுகிருன். ஆனல் அவள்கொண்டுள்ள சினம் 'ஒளி' யால் அவனை ஊடுறுவுகிறது.

வேறொருத்தியிடம்சென்று இன்பம் துய்த்து விட்டு வந்துள்ளான் என்பதை அவன் மேனியிலே தோய்ந்துள்ள கொம்பரக்கு காட்டுகிறது. கொம்பரக்கின் குறி பதிந்து வந்துள்ளான். அவன் நெற்றி ஒளி வீசுகிறது. கொம்பரக்கு பெண்கள் காலில் பூசிக் கொள்ளும் வண்ணக் கலவை. இக்கோலம் தோய்ந்து வரும் நாயகனைக் காண்கிருள். அவள் கண்கள் சினத்தால் தீச் சுடர் போல் சிவக்கின்றன. அச்சிவந்த ஒளிபட்டு அவள் காதுகளில் பொருந்தியுள்ள முத்துக்கள் புதிய மாணிக்கங்களாயின.

"அதிகச் சினங் கொண்டனள்
செங்கட் பார்வையினுற் செவிசூழ்
கதிர்முத் தெலாம் புது மாணிக்க
மானவ[illegible] காரிகைக்கே

என்று கூறுகிறது கவி!

உயிர் பாயும் கைகள்!

(நாயகி ஆறு)

நாயகி ஒருத்திக்குத் தோழி ஒப்பனை செய்கின்ருள். நறுநெய் தடவி, குழல் முடித்து மலர் சூட்டித் தம்ஒப்பனைத் திறத்தைக் காட்டிய வண்ணம் இருக்கிருள். செஞ்சாந்துக் குழம்பினுல் மார்பகத்தே 'தொய்யில்' எழுதுகிருள். எழுதுகின்ற அந்தக் குறும்புக்காரி ஒரு வேடிக்கை செய்ய வேண்டும் என எண்ணுகிருள். என்ன செய்தாள்? வல்லியும், பூவும் எழுத வேண்டியவள், நாயகனின் மலர்க்கை அவள்மார்பில் பொருந்தியிருப்பதுப்போன்றுஎழுதுகிருள் தலைவி தன் மார்பகத்தைப் பார்க்கிருள். தன் தலைவன் கைமலர்கள் தன் மார்பாகத்தில் இருக்கக் காண்கிருள்! அக்கையின் விரல்கள் அவள் உயிர் பாய்வனப் போல 'அழுத்தந்திருத்தமாக, எழுதியிருக்கிருள். தலைவி இந்த ஓவியத்தைக் கண்டு உள்ளூர மகிழ்கிருள். நகைத்துக் கொண்டே தோழியை மல்லிகைப் பூ செண்டால் அடிக்கிருள்.

வகை வகை கோல முலைக்கிடும்
போது மணாளன் விரற்
றகை யுயிர் பாய்வன போலவன்
கையைச் சகியெழுத
நகை கொட தட்டிச் சுகவனர்
வெற்பினன்நங்கை கண்ணி
முகைவிரி மாலிகை யாலடித்
தாளொரு மோகினியே.

[மூன்ருண்டுகள் நிரம்பப் பெற்ற ஒரு சிறுவன் முதுகிலே அ, ஆ என்று தமிழ் எழுத்துக்களை எழுதினுர் ஆசிரியர், முதுகிலே எழுதுவதைக் கொண்டு இந்த எழுத்து இப்படித்தான் இருக்கும் என்றுணர்ந்த அந்தச் சிறுவன் எழுத்தைக் கற்று வந்தான். எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும். ஆனல் அவனுக்கோ பார்த்துப் படிக்கும் விழி பழுதுபட்டுவிட்டது. அம்மை நோயினுல் கண்களின் பரர்வையை இழந்தான். ஆதலின் அகக்கண்கொண்டு, ஆர்வமேலீட்டால் முதுகைத் தன் எழுதுபலகையாகக் கொண்டு கல்வி கற்று வந்தான். மாணவர் எள்ளி நகையாடி வந்தனர். ஆனல், அதனைப் பொருட்படுத்தாது, ஆசிரியர் கூறுவதைமனத்தின் கண்ணே பதிய வைத்துக் கொள்ளும் ஆற்றல் பெற்று வந்தான். கேலிசெய்த மாணவர்களும் வெட்கும்படி கேட்ட

(6-ம் பக்கம் பார்க்க)



மலர் 1] [இதழ் 46

தாத்தா குமரனாகிவிடமாட்டார்!

"அரசாங்க அன்றாட நடவடிக்கைகளில் அதிகாரிகளின் செயல்முறையில் மந்திரிகள் தலையிடுகின்றனர். இல்லையென்று சொல்ல முடியுமா?

உத்தியோக உயர்வு, வேறு இடத்திற்கு மாற்றுவது ஆகியவைகளிலும் மந்திரிமார்கள் தலையிடுகின்றனர். எனவே அதிகாரிகள் கெட்டிக்காரர்களாகவும், திறமையானவர்களாகவும் இருப்பதில்லை. இதனை இல்லையென்று சொல்ல முடியுமா?

மந்திரிமார்களின் லஞ்ச ஊழலினால் சர்க்கார் ஊழியர்களிடம் இந்த நோய் பரவி அதிகரித்துவிட்டது இல்லையென்று சொல்ல முடியுமா?"

பேராசிரியர் இரத்தினசாமி எழுப்பியுள்ள இந்த கேள்விகளை கடந்த இதழில் வெளியிட்டிருந்தோம். கேள்விகளின் நியாயத்தை மெய்ப்பிப்பதுபோல் காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சியின் கமிட்டியொன்று பதவியிலுள்ள காங்கிரஸ்காரர்களின்மீது கூறப்படும் புகார்களை விசாரிக்க காங்கிரஸ் ஸ்தாபனத்திற்குள்ளேயே உயர் அதிகார தேசிய விசாரணைக்குழு ஒன்றை அமைக்க வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறது.

காங்கிரசுக்கு புதுவேகம் அளிப்பதற்காக[illegible] இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டதாகக் கூறப்படு[illegible]

இந்த கமிட்டியின் அமைப்பாளரான் ராமஜிபாய் என்பவர் நடுநிலைமையாளர் என்ற சிறப்புக்கு அருகதையானவர்களையே அந்த குழுவில் நியமிக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்.

உடலில் புண்ணிருக்கிறது என்று கூறப்பட்ட நேரத்திலெல்லாம்புனுகுபூசி மறைக்கமுயன்றனர். இன்றுபுரையோடிக் கொண்டிருக்கிறது. இப்போதுதான் புண்தானா என்று ஆராய டாக்டரிடம் நோயாளியை அனுப்புகிறார்கள்.

ஆட்சி பீடத்திலுள்ள காங்கிரஸ் பதவியாளரின் ஊழலையும், முறையற்ற போக்கையும் தவறான நடவடிக்கைகளையும் எதிர்க்கட்சிகள் எடுத்துச்சொன்ன நேரத்திலெல்லாம், எதிர்க்கட்சிக்காரர்கள், குறை கூறாமல் எங்களை புகழவா செய்வார்கள் என்ற பதிலை அளித்துநாட்டை ஏமாற்றினார்கள். தங்களையும் ஏமாற்றிக்கொண்டார்கள்.

நியாயமான குற்றச்சாட்டுக்களை அவதூறுஎன்று காரணம் காட்டி புறக்கணித்து வந்துள்ளனர். இனிமேல் அலட்சியப் படுத்தமுடியாது என்ற அபாயநிலை காங்கிரசுக்கு வந்துள்ளது. எனவேதான் புகார்கள் கூறுவதே தவறு என்றிருந்த நிலைபோய், புகார்களை விசாரிக்க அதிகாரம் படைத்த விசாரணைக் குழு தேவை என்ற கட்டத்திற்கு வந்துள்ளது.

கமிட்டியின் சிபாரிசை காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளுமா? விசாரணைக் குழுவிற்கு உயர் அதிகாரம் இருக்குமா? குற்றம் என்று தெரிந்தால் கண்டிக்க முன் வருமா என்பதெல்லாம் நமக்கு சம்மந்தமில்லாத விஷயங்கள். கமிட்டியின் அமைப்பாளரே தனது அவநம்பிக்கையைத் தெரிவித்திருக்கிறார். நடுநிலையாளர் என்ற சிறப்புக்கு அருகதையானவர்களேவிசாரணைக்குழுவில் இடம்பெற வேண்டும்என்றுதெரிவித்துள்ளார். பாரபட்சம் நிறைந்தவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள்: குழுவின் நோக்கத்தை தோற்கடித்து விடுவார்கள் என்று அச்சப்படுகிறார் என்பதுதானே அதற்குப் பொருள்?

ஒருவேளை விசாரணைக்குழு, பதவியிலுள்ளோர் செய்யும் தவறை மறைக்கும் போர்வையாகவும் பயன் படலாம். ஆனால் இதன் மூலம் நாட்டு மக்களுக்கு ஒரு சேதி தெளிவாக்கப் படுகிறது. இவ்வளவு நாளும் மூடி மறைத்து வைத்திருந்த தந்திரம் பலிக்கவில்லை. பரிகாரம் செய்யப் போகிறோம் என்ற பாவனையாவது செய்ய வேண்டுமென்ற முடிவுக்கு வந்துள்ளார்கள் என்பதைத்தான் சிபாரிசும் கமிட்டியும் தெரிவிக்கிறது.

மிஸ்ரா என்பவரின் தலைமையில் அறிக்கை தயாரித்துள்ள வேறோர் கமிட்டி காங்கிரஸ் பாசிபடர்ந்த குட்டையாகி விட்டதற்கு காரணங்கள் கூறுகின்றது.

இஸ்லாமியர்களையும் ஆதிதிராவிட மக்களையும் அணைத்துச் செல்வதற்கு தனிஅக்கறை செலுத்த வில்லையாம் சுதந்திரம் பெறுவதற்கு முன்பு பெரிய பொறுப்புகள் அவர்களிடம் வழங்கப் பட்டதாம்! அது இப்போது குறைந்து விட்டதாம்!

முஸ்லீம்லீக் ஏன் ஒழியவில்லை, இன்னும் சில மாநிலங்களில் முஸ்லீம் லீக்கிற்கு மீண்டும் புத்துயிரளிக்க விரும்பும் முயற்சிக்குப்பின்னால் இருக்கும அடிப்படைக் காரணத்தை அறிய வேண்டுமாம்! முஸ்லீம்களின் தேவைகளை உணர்ந்து அதனை நிறைவு செய்ய முயல வேண்டுமாம்.

வாலிபர்களை காங்கிரஸ் வசீகரிக்காததற்கு கொளகை மந்தநிலையும், வேலையில்லாத் திண்டாட்டமும் காரணங்களாம்.

விலைவாசி உயர்வும், வேலையில்லாத் திண்டாட்டமும், திட்டச் செலவுகளினால் ஏற்பட்டுள்ள புதிய சுமைகளும், எதிர்க்கட்சிகள் வளருவதற்கு வாய்ப்பாய் அமைந்துவிட்டனவாம்!

ஆதி திராவிடர்களையும் முஸ்லீம்களையும் காங்கிரஸ் புறக்கணித்திருக்கிறது.

வாலிபர்களை வசீகரிக்கக்கூடிய கொள்கை வனப்பு காங்கிரசிடம் இல்லை,

விலைவாசி உயர்வும் வேலையில்லாத் திண்டாட்டமும், திட்டச் செலவுக்ளினால் புதிய சுமைகளும் காங்கிரஸ் ஆட்சியினால் ஏற்பட்டுள்ளது.

இவை நம்முடைய குற்றச்சாட்டுகளல்ல. மிஸ்ரா கமிட்டியின் கண்டுபிடிப்புகள். 'புகார்' கமிட்டிபோலவே மிஸ்ரா கமிட்டியும் ஓர் குழுவை சிபாரிசுசெய்துள்ளது.

ஒவ்வொரு மாநிலத்திலும்காங்கிரசுக்குள்ளே கோஷ்டிச் சண்டைகள், குத்துவெட்டு, போட்டாபோட்டி இருக்கிறதாம். ஆளும் அமைச்சர்களுக்கும், அமைப்பை நடத்துகிற தலைவர்களுக்கும் சச்சரவு நடைபெறுகிறதாம். இவைகளை ஒழித்துக்கட்டி, சுமுகமாக செயல்கள் நடைபெற "இயைபு கவுன்சில்" என்ற ஓர் குழு நிறுவ வேண்டுமாம்! இந்த குழுவில் மாநில முதலமைச்சரும், மாநில காங்கிரஸ் தலைவரும், மாநில காங்கிரசைச் சேர்ந்த இாண்டு உறுப்பினர்களும், காங்கிரஸ் செயற்குழுவால் நியமிக்கப்படும் ஒரு உறுப்பினரும் அங்கம் வகிப்பார்களாம்!

"இயைபுக் கவுன்சில்" என்ற பெயரைக் கேட்டாலே விசித்திரமாகத் தோன்றும். தாளம் தவறுகிறது. வாத்யங்கள் ஒத்துழைக்க மறுக்கின்றன. அபஸ்வரம் எழுகிறது. எனவே நாத ஒற்றுமைக்கு இயைபுக் குழுக்கள் தேவைப்படுகின்றன. வேறு ஏதேதோ குழுக்கள் அமைத்த காங்கிரஸ் இயைபுக்குழு அமைக்கும் பரிதாப கால கட்டத்திற்கு வந்துள்ளது.

குற்றங்கள் பளிச்செனத் தெரிந்தாலும் மனித மனம் அவ்வளவு விரைவாக ஒத்துக்கொள்வதில்லை. அதற்கு சமாதானம் தேடுவதிலேயே காலத்தை ஓட்டும் குணம் பெற்றிருக்கிறது. காங்கிரஸ் அதற்கு விதி விலக்காக இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. எனவேதான் குற்றங்களை களைய முயற்சிக்காமலும், நிலைமையை உணர்ந்து கொள்ளாமலும் காலம் கடத்தி விட்டது. கஷ்டங்களைப் பெருக்கி விட்டது.

புனுகு பூசும் வேலையை நிறுத்திக் கொண்டால் மட்டுமே புண் ஆறிவிடாது. புரையோடி போயிருக்கும் காங்கிரசை எந்த மருத்துவராலும் குணப்படுத்த முடியாது. அறிக்கைகள் என்ற மாத்திரைகளும் குழுக்கள் என்ற கஷாயமும் ஒருநாளும் மாறுதலைச் செய்ய போவதில்லை.

காங்கிரஸ்தான் தோன்றிய நோக்கத்தை நிறைவேற்றி நெடுநாளாகி விட்டது. காந்தியாரின் சொற்படி அமைப்பு கலைக்கப் பட்டிருந்தால் இந்திய அரசியலாவது இவ்வளவு குழப்பம் இல்லாமல் இருந்திருக்கும். அதைச்செய்யத்தவறிய குற்றத்திற்கு இன்று தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கிறது. பட்டம், பதவி ஆகியவைகளில் பேராசை கொண்ட சுயநலக் காரர்களின் சூதுக் கோட்டையாகவும், ஏழைஎளியவரை சுரண்டி தங்கள் சுக வாழ்வு என்ற உப்பரிகையை அமைத்துள்ள சொகுசுக்காரர்களின் வேட்டைக் காடாகவும் மாறிவிட்டது. அதை வாலிபமாக்குவதோ வசீகரமாக்கதோ வெற்றியடைய முடியாத வீண்வேலை.

தைலம் தடவுவதனாலேயே தாத்தா குமரனாகி விட மாட்டார். பவுடர் பூசுவதாலேயே பாட்டி, பதினாறு வயது பாவையாகி விட மாட்டாள்.

கொங்குநாட்டு தீரன் சின்னமலை

K.A.மதியழகன்

நாணம் கவ்வியது!

8

பெரியதம்பி அவனது வாழ நாளில் இப்படி ஓர் பேருணர்வைப் பெற்றதில்லை. ஆனந்தமும்ஆர்வமும் அவனது திருமுகத்திற்கு அழகூட்டியது. வள்ளி நாயகிதான் நிசப்தத்தைக் கலைத்தாள்.

"பறவை நெடுநேரம் வான மண்டிலத்திலேயே பறந்துக் கொண்டிருக்கமுடியாது. பூமியில் மரக்கிளையிலேயுள்ள கூட்டிற்கு வந்துதானாகவேண்டும்"

"கூடே இன்னும் கட்டவில்லை. அதற்குள் முட்டையிட்டு குஞ்சுபொரித்து, அதற்கு இரைதேடும் கட்டத்திற்குபோய் விட்டாய்!"

"போங்கள்! என்னை வேடிக்கை செய்வதென்றால் உங்களுக்கு வெல்லமாக இருக்கிறது!"

உபச்சாரத்திற்கு பிடிக்காது போல் கூறினளே தவிர வள்ளி நாயகியின் உள்ளத்தில் தாய்மை உணர்வு சுரந்தது.

"நீதான் பெரிய வேதாந்தியாய் இருக்கிறயே! இதுவெல்லாம் எங்கே கற்ருய்"

"எல்லாம் இந்த வேலவரிடம் தான் கற்றேன்!"

புராணத்து வேலவன் வேடனாக, விருத்தனாக வந்து வள்ளியை ஏமாற்றினன். ஆனால் இந்த வள்ளி, வேலைக்கார வனிதைபோல நடித்து வேலவனை ஏமாற்றிவிட்டாள்!"

"நடித்து ஏமாற்றிவிட்டேனும்! அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். நீங்கள்தான் ஆனூர்க் கோட்டை படைவீரன் என்று சொல்லி இத்தனை நாளும் பதைக்க வைத்தீர்கள்!"

"அதனாலென்ன நட்டமாம்"

"உங்களுக்கென்ன? நன்ருகக் கேட்பீர்கள்! நான்பட்ட வேதனையில் ஒரு துளி அனுபவித்திருந்தால் "பெண்ணின் உள்ளம் தெரிந்திருந்தால் இப்படியெல்லாம் செய்திருப்பீர்களா?"

"பெண்ணின் உள்ளம் எனக்கெப்படித்தெரியும்? இனிமேல் தான் தெரியவேண்டும்!"

"தெரியாமலா, உங்களுக்கு இவ்வளவு தைரியம் பிறந்திருக்கிறது!"

"வள்ளிநாயகி! நான்உடனே ஊர் செல்ல வேண்டும். அண்ணனைச் சந்தித்து விஷயத்தைக் கூற வேண்டும்! அப்படியே, மகிழ்ச்சியால்பூரித்துப்போவார்!

"என் சந்தேகம் சரிதான்! வள்ளிநாயகியைப் பார்க்கவேண்டும் என்றீர்கள். பார்த்தவுடன் அவள் அழகில் மயங்கி, அவளையே திருமணம் செய்வது என்று முடிவுக்கு வந்து விட்டீர்களானல் என்கதி என்னவது? என்று கூறினேனே? இப்போது வள்ளி திருமணத்திற்கு நாள் குறிக்க விரைகிறீர், அப்படித்தானே! என் நிபந்தனை யென்னுவது?"

"என்ன நிபந்தனை?"

'பார்த்தீர்களா, ஒருநிபந்தனையென்ன. ஓராயிரம் நிபந்தனைகள்போடு. நிறைவேற்றி வைக்கிறேன் என்றீர்! அப்பப்பா! வாக்குறுதிகள் வழங்குவதிலும், அதை காற்றிலே பறக்க விடுவதிலும் இந்த ஆண்கள் மிகவும் சமர்த்தர்கள்போல் இருக்கிறது. என்னையும் மாங்கனியையும் யாராலும்பிரிக்க முடியாதுஎன்று சத்தியம் செய்தீர். நாலு நாழிகை ஆகவில்லை!"

மாங்கனி நிகழ்ச்சி வள்ளி நாயகியின் உள்ளத்தில் எவ்வளவுபசுமையான நினைவுகளைச் சேர்த்திருக்கிறதுஎன்று நினைத்த மாத்திரத்தில் பெரிய தம்பியின் உடலெல்லாம் [illegible]ல்லரித்தது.

"ஓ அதுவா! [illegible]ங்கனிதான் வள்ளிக்கிழங்கு ஆகிவிட்டதே!

"உரக்கச் சொல்லாதீர்கள்! யாராவது சிரிக்கப்போகிருர்கள். கனி கிழங்காகுமா?"

"ஆகாதென்று சொல்பவர்கள் என் முன் வரட்டும்! பதில் சொல்கிறேன். இப்போது யாராவது பிஞ்சு, பூவாயிற்று, மரம் மலர்க் கொடியாயிற்று என்று சொன்னல் கூட நம்ப மறுக்கமாட்டேன்!"

'நான்கூடத்தான்பழனியில்நீங்கள் ஆனூர்கோட்டை சாதாரண படைவீரர் என்று சொன்னதும் அப்படியே நம்பிவிட்டேன். அப்பாவோ பெரிய இடத்து சம்பந்தத்திற்கு துடியாய் துடிக்கிருர். என் உள்ளமோ மனங்கவர்ந்தவர் பின்னலே சென்றுவிடடது. அப்பாவின் ஆசைக்கு நான் இணங்குவது என்பதோ நான் உயிரோடிருக்கும்போது இல்லை. நெருப்புக்கும் நீருக்கும் மத்தியிலே தத்தளித்தேன். என்னல் அப்பாவுக்கு பெரியஇடத்து பொல்லாப்பு வரப்போகிறது. உங்களுக்கும் ஆனூர் கோட்டையில் வேலை தொலையப் போகிறது என்று பயந்து கொண்டிருந்தேன்!"

"வேலை போயிருந்தால் வேறு வேலை சம்பாதித்துக் கொடுத்திருப்பாயா?"

"வேலையா? எங்களுக்கு கொடுத்து வைக்க வேண்டுமே! முத்துவேலப்பரின் மாளிகையில் அருமைமாப்பிள்ளையாக அழைத்துக் கொள்ள இருந்தோம்!"

"நீயும்தான் மாங்கனியை மறந்து விட்டாய். முத்து வேலப்பரின் திருநிறைச் செல்வி வள்ளி நாயகி அம்மையாராகத்தான் அதிகாரத்துடன் பேசுகிருய்!"

"இப்போதே மணவோலை தயாரிக்க ஆரம்பித்து விட்டீர்கள் போல இருக்கிறது. திருநிறைச் செல்வியெல்லாம் அப்போது வைத்துக் கொள்ளலாம். வந்த விருந்தினரை உணவருந்துங்கள் என்று கூடச்சொல்லவில்லை. என்னையே நான் மறந்து விட்டேன்!"

"நேரமாகி விட்டது வள்ளி! நான் உடனே சென்று அண்ணவைக் காணவேண்டும். சாப்பிடுவதற்கு நேரமில்லை."

"நேரம் போகிறதே தெரியவில்லை. உங்களுக்கோ நேரமாகி விட்டதாம்! அப்பாவைச் சந்திப்பதற்காக வந்தேன் என்றீர்கள்! மாலைக்குள் அப்பாவும் வந்து விடுவார்!"

"மகளையே சந்தித்து விட்டேனே! இனி அப்பா எதற்கு? நான் சந்திக்காததே நல்லது. அவரைக் காண்பது முறையுமல்ல. அண்ணனை அனுப்புகிறேன்"

"அப்பாவினிடம் என்னகூறுவது? தாங்கள் வந்ததாகச் சொல்லவா?"

"வேண்டவே வேண்டாம்! இந்த வேடிக்கை நம்மோடு இருக்கட்டும்"

"இல்லை. சொல்லத்தான் போகிறேன்!"

'என்ன சொல்ல போகிருய்?

"அப்பா! நீங்கள் பார்த்திருக்கும் மாப்பிள்ளை மிக பொல்லாதவர்! நமதுமாளிகைத்தோட்டத்திலேயே மாங்கனி என்ற மாதுடன் சரசமாடக் கண்டேன். மாங்கனி! என்னையும்உன்னையும் யாராலும்பிரிக்க முடியாது என்று அவள் கைமேல் அடித்து சத்தியம் செய்துக்கொண்டிருந்தார்...

"அத்துடன் நிறுத்தாதே! மாவிலை மெத்தையிலே அவர் அமர்ந்திருந்தார். அவர் மடியிலே முகம்வைத்து அவள் படுத்திருந்தாள். அவரை விழுங்கி விடுபவள்போல் பார்த்தாள். அவர் அவள் கூந்தலை லேசாக

கோதினர் – இதையும் சொல்லேன்.''

"போங்கள்! இதையெல்லாம் யாராவது...''

"போய் வருகிறேன், வள்ளி''

"நினைவிருக்குமல்லவா ?''

"மறந்து விட்டாலல்லவா, உன்னை நினைக்க வேண்டும். நீதான் நெஞ்சை விட்டு அகல மறுக்கிறாயே !''

எழுந்து நின்று அவளருகே சென்றான். வள்ளிநாயகி ஒதுங்கி நின்றாள். பெரியதம்பிதான், தந்தை பார்த்திருக்கும் மணவாளன் என்று தெரிந்தது முதல் அவளை அறியாமல் நாணம் கவ்விக் கொண்டது. மாங்கனியை மறந்தே விட்டாள்! பெரியதம்பி அவள் கரத்தைப் பற்ற முயன்றான். அவனிடமிருந்து விடுவித்துக் கொண்டு "கிணற்றுத் தண்ணீரை வெள்ளமா கொண்டுபோய் விடும்'' என்றாள்.

"வெள்ளம் கொண்டுபோய் விடாது. ஆனால் கிணற்று மேட்டிலுள்ள தொலைகல் இடிந்து விழுந்து கிணற்றையே மறைத்து விடுவதுமுண்டு'' என்றான்.

"கிணற்றுக்குச் சொந்தக்காரர்கள் ஜாக்கிரதையாய் இருந்தால் அந்த ஆபத்தெல்லாம் நிகழாது'' என்றாள்.

அவள் கருத்தைப் புரிந்து கொண்ட பெரியதம்பி அவளை விட்டுப்பிரிய மனமில்லாமல் வெளியேவந்து குதிரை மீது ஏறினான். வள்ளிநாயகி வாயில் தூணைக்கட்டிக்கொண்டு அவனையே உற்று நோக்கிக் கொண்டிருந்தாள்.

சாதாரணநேரங்களில் குதிரை இடக்குச் செய்தால் கோபிக்கும் பெரியதம்பி குதிரை இடக்கு செய்யாதா, அதனால் கொஞ்சம் தாமதமாகாதா, அதற்குள் இரண்டு, மூன்று முறை திருட்டுப்பார்வைபார்த்து விடலாமென்று எண்ணினான். குதிரைக்கு வள்ளிநாயகியின் மனநிலை இருந்திருந்தால் அவன் கருத்துப்படி நடந்திருக்கும்! பெரியதம்பி கடிவாளத்தைப் பிடித்ததும் காற்று வேகத்தில் பறந்தது. திருப்பத்தில் மறைவதற்குள் இரண்டு மூன்று முறை திரும்பிப்பார்த்தான்.

வள்ளிநாயகி குதிரை சென்ற திசையைப் பார்த்துக்கொண்டிருந்தாள். நெடுநேரமாகியும் அந்த தூணைவிட்டு அவள் நகரவேயில்லை. அவள் காதுகளில் குதிரையின் குளம்படிச் சத்தம் ஒலித்துக்கொண்டேயிருந்தது.

பெரும் வெற்றிக் களிப்பில் பெரியதம்பி ஊர் திரும்பினான். போரிலே எதிரிகளைமுறியடித்து வெற்றிவாகை சூடி வீடு திரும்பும் நேரத்தில் மகளிரெல்லாம் அவன் பவனிகண்டு மகிழ்ந்து ஆரத்தி எடுத்திருந்தால் கூட அவ்வளவு மகிழ்ந்திருக்கமாட்டான்.

சின்னமலையைக் கண்டான். ஏதேதோ சொல்லவேண்டுமென்று வந்தவன் வாயடைத்து நின்றான். நா எழவேயில்லை. அமைதியாக இருந்த சின்னமலை முத்துவேலப்பர் மாளிகையில் ஏதோ அசம்பாவிதம் நடந்து விட்டதோ என்று அஞ்சினான். பெரியதம்பி பேசாமல் இருப்பதைக்கண்டு அவனே துவங்கினான்.

"என்ன தம்பி! முத்துவேலப்பரைக் கண்டாயா? நான்தான் தவறுசெய்து விட்டேன். உன்னை ஒரு வார்த்தை கேட்டிருக்க வேண்டும். அவசரப் பட்டுவிட்டேன். நான்தான் அவசரக்காரனென்றால் நீ அதைவிட அவசரக்காரனாகி விட்டாய். என்ன கூறினாய்? அவர் என்ன சொன்னார். அண்ணனுக்கு 'பெண்' கேட்டாயா? விசித்திரமான தம்பியப்பா நீ'' என்று அடுக்கிக் கொண்டே போனான்.

முந்தின நாள் அவன் கண்ட சின்னமலைக்கும் இன்று காணும் சின்னமலைக்கும் பெரிய தம்பி பெரிய வித்தியாசத்தைக் கண்டான்.

"முத்து வேலப்பர் ஊரிலில்லை. நான் அவரைச் சந்திக்கவில்லை'' என்றான் பெரியதம்பி.

"நல்ல வேளை! என்னை இக்கட்டான நிலையில்விடாமல் இருந்தாய். நான் பார்த்துக் கொள்கிறேன். நீ கூறிய பெண்ணைப் பற்றி பேர், ஊர், விபரம் ஒன்றுமே தெரியவில்லையா?'' என்றான்.

"அவன் திருமணம் செய்து கொள்ள விரும்பாததற்குக் காரணத்தைதம்பியிடம்விளக்கவேண்டிய வேலை குறைந்தது'' என்று நிம்மதிப் பட்டான்.

எப்படி ஆரம்பிப்பது என்று திக்கு முக்காடிக் கொண்டிருந்த பெரிய தம்பிக்கு ஓர் பிடிக்கயிறு கிடைத்தது.

"முத்து வேலப்பரின் மகள் தான் நான் குறிப்பிட்டிருந்த பெண்'' என்று தட்டுத் தடுமாறி நிறுத்தினான்.

சின்னமலைக்கு ஏதோ கதைகளிலேகேட்பதுபோலஇருந்தது. அதிசயமும்ஆச்சரியமும் அவனை பின்னிக் கொண்டது.

"சரியாக பா[illegible]ா, தம்பி. தவறிருக்காதே[illegible]ான்.

"இல்லை. அவளே என்னிடம் பேசினாள். முத்து வேலப்பர் ஊரிலில்லை என்று அவள்தான் கூறினாள்'' என்று சொல்லி நிறுத்தினாள்.

"தம்பியின் ஆசையும் நிறைவேறுகிறது. என் வாக்குறுதியும் நிறை வேறுகிறது. ஒரே கல்லில் இரண்டு மாங்கனி'' என்று மனதிற்குள்ளே சொல்லிக் கொண்டான்.

"சரி தம்பி அண்ணாவை கலந்துக் கொண்டு மற்றதை நான் கவனிக்கிறன்'' என்றான்.

"அண்ணியாரிடம் சொல்லி வருகிறேன்'' என்று கிளம்பினான் பெரியதம்பி

"அவர்கள் இங்கு இல்லை. ஊருக்குச் சென்று விட்டார்கள்'' என்று நிறுத்தினான் சின்னமலை.

"விடியற்காலை இருந்தார்கள். என்ன காரணம்? ஊரில் ஏதாவது...'' என்றான் பெரியதம்பி.

"ஊரில் ஒன்றுமில்லை எல்லாம் உள்ளத்தில்தான்'' என்று சொல்லி விட்டு "நீ போய் சாப்பிடு'' என்று சொல்லிவிட்டு சிந்தனையிலாழ்ந்தான் சின்னமலை.

ஆரியப்பட்டியான் ஆணை!

ஆரியப்பட்டி ஆறுமுகக்கவுண்டர் எதையும்ஆழமாக ஆராய்ந்து பார்க்கும் போக்குடையவரல்ல. படபடத்த சுபாவக்காரர். வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லையென்றாலும் தங்கை வீடு தன் வீட்டிற்கு உயர்ந்தது என்ற லேசான பொறாமை இருந்தது. கெம்பாயம்மாள் அடிக்கடி அதிருப்திப்பட்டுக்கொண்டதை ஆறுமுகக் கவுண்டர் அறிவார். குடும்பம் என்றால் காலாகாலத்தில் ஒத்துப்போய் விடும் என்ற மேற்போக்கிலே இருந்தார்.

குழந்தை குட்டிகள் சகிதம் புருஷன் வீட்டிலிருந்து அவள் வந்து விட்டது, அவருக்கு பிடிக்கவில்லைதான். வாயை மூடிக் கொண்டு பேசாமல் இருந்தார்.

கெம்பாயம்மாளுக்கு மைத்துனர்கள் மீது ஏற்பட்ட கோபம் தனிமையில் வேகமாக வளர்ந்தது. ஏறக்குறைய பழியுணர்ச்சியாகவே மாறி விட்டது! அவள் புலம்பலும் அழுகையும் ஆறுமுகக் கவுண்டரிடம் பலிக்கவில்லை.

"குடும்பத்தில் இதுவெல்லாம் சகஜமம்மா! நீதான் அந்த குடும்பத்திற்கு தலைவிபோல. குற்றம் குறைஇருப்பதுதான்! கொஞ்சம் அனுசரித்துக் கொண்டு நடக்க வேண்டுமம்மா'' என்று சொல்லி வைத்தார்.

கெம்பாயம்மாளுக்கு ஆத்திரம் தாங்கவில்லை.

"என்னை வற்புறுத்தாதீர்கள் அப்பா! தொந்தரவு செய்வீர்களானால் என்னையும் குழந்தை குட்டிகளையும் கிணறோ, குட்டையிலோதான் பார்க்க வேண்டியிருக்கும்'' என்று புது பாணியை துவக்கினாள். ஆறுமுகக்கவுண்டரின் பாச உணர்ச்சி, இவ்வளவு வெறுப்பாக மகள் கூறுவதற்கு காரணம் இல்லாமல் இருக்க முடியாது என்று எண்ணியது.

"என்னை வேண்டுமானால் இம்சிக்கட்டும். சொத்துக்களை வேண்டுமானால் நாசமாக்கட்டும். உங்கள் மருமகனுக்குத்தான் அக்கரையில்லை. நான்தான் வாழ்க்கைப் பட்டு விட்டேன். உங்களை அவமானப்படுத்தினால் என்னால் சகித்துக்கொள்ள முடியுமா, அப்பா, சொல்லக்கூடாது என்றுதான் அடக்கி, அடக்கி வைத்தேன். முடியவில்லை'' என்று தேம்பித் தேம்பி அழுதாள்.

"என்னம்மா! மூன்று குழந்தைக்கு தாய். சிறுபாப்பாபோல அழுகிறாய் விஷயத்தைச் சொல்லு'' என்றார்.

அவள் பீடிகையிலிருந்து தன் குடும்பத்தைப் பற்றி ஏதோ தாறு மாறாக பேச்சு நடந்திருக்கிறது. அதனால் மகள் கோபித்துக் கொண்டிருக்கிறாள் என்று முடிவு செய்துக் கொண்டார். அவருடைய ஆவலைக் கண்ட கெம்பாயம்மாள்.

"அப்பா! உங்கள் யேத்தி நல்லாத்தாளுக்கு என்னவாம்! அவளைக் கட்டிக் கொள்ளக்கூடாதாம்! நம் குடும்ப சம்பந்தமே அவர்கள் அந்தஸ்துக்கு குறைவாம்! அத்தோடு விட்டார்களா! உங்களையும் நம் குடும்பத்தையும் வாய்க்கு வந்தவாறெல்லாம் ஏசினார்களப்பா, என் எதிரிலேயே! உங்கள் மருமகன் தான்சகித்துக்கொள்கிறார். நான் எப்படியப்பா சகிப்பது? உங்களுக்கு பிறந்தவளாயிற்றே! என்னையும் உங்களையும் அவமானப் படுத்துவதற்கென்றே பெரிய தம்பிக்கு சென்னிமலையில்பெண் பார்த்திருக்கிறார்கள்!'' என்று உருக்கத்துடன் சொன்னாள். ஆறுமுகக் கவுண்டருக்கு நறுக்கென்று பட்டது.

இருக்குமா, இருக்காதா, அதுபற்றியெல்லாம் சிந்தித்து அவருக்கு பழக்கமில்லை. நல்லாத்தாளை திருமணம் செய்ய மறுத்ததுகூட அவருக்கு கோபமில்லை. தன் குடும்பத்தைஇழிவு படுத்தி பேசினார்கள் என்பதை அவரால்பொறுக்க முடியவில்லை.

"அந்த பயல்களுக்கு அவ்வளவு அகங்காரமா? ஆரியப்பட்டியானை சரியாகத் தெரிந்துக் கொள்ளவில்லை. சிறுபிள்ளைகள்! அவர்களை ஒருகை பார்க்கிறேன். எல்லாம் புரிந்துவிடும்'' என்று ஆணையிட்டார். ஆறுமுகக் கவுண்டர்.

தொடரும்

19–12–'59 முதல் வெளிவருகிறது !

சுவைமிக்க கற்பனைகள் !
சூடான அரசியல் கருத்துக்கள் !
அன்றாட அரசியலின் ஆராய்ச்சி அரங்கு !
தி. மு. க. அணிவகுப்பில் முரசு கொட்டும் பொன்னேடு !

தாய் நாடு
ஆசிரியர்: T.K.சீனிவாசன்

(தி. மு. க. வார ஏடு)

விலை 16 புதியகாசு — ஆண்டு சந்தா ரூ. 8, அரைஆண்டு சந்தா ரூ. 4

முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் விண்ணப்பிக்கவும்

'தாய் நாடு' அலுவலகம், சென்னை–14.

ஆறு நாயகிகள்...!

(2-ம் பக்கம் பார்க்க)

வற்றை அப்படியே திரும்பச் சொல்லும் திறத்தால் ஆசிரியரின் பாராட்டினைப் பெற்ருன். தொடர்ந்து தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுவரலானன்.

மகன் நிலைக்கண்டு வருந்திய பெற்ருேர் மகிழும் வண்ணம் கலைத்தேர்ச்சிபெற்ருன். தன் மகன் 'மாம்பழம்' பிற்காலத்தில் மாம்பழக் கவிச்சிங்க நாவலன் என்று சிறப்பிக்கப்படுவான் என்று அவர்கள் எண்ணவில்லை.

மதுரை மாவட்டத்திலுள்ள பழனியைச் சார்ந்த இவர் மாம்பழக்கவி என்று அழைக்கப்பட்டார்.

தன் புலமைத் திறமையால் இராமநாதபுரம் சேதுபதி சமஸ்தானத்தில் அவைக்களப் புலவராகத் திகழும் நிலைபெற்ருர். அவர் வாழ்ந்த நாளில் தன்னேரில்லாதகவிஞராக விளங்கினர். புலவர்கள் இவர் புலமைகண்டு அஞ்சினர். அவர் வாழ்ந்த நாளில் பெருநிலக் கிழார், குறுநிலக் கோமான்கள் கவிஞர்களிடம் சிற்றின்பக் கவி கேட்டலும், இன்பஉரை கேட்டுப் பொழுது போக்குதலும் ஆகிய நிலையில் இருந்தவர்கள். ஆதலின் பாடிப் பிழைக்கும் பாவாணர்கள், தூதும் மடலும், உலாவும் அவர்கள் மகிழும்படி சிற்றின்பச்சுவை சொட்டப் பாடுவாராயினர். பிரபந்த வகையைச் சேர்ந்த 'சதகம்' எழுதிய புலவர்கள் மட்டுமே மக்கள் மனத்திடை நிலவும் எண்ணங்களையும், சமுதாயத்துள் இயங்கிவரும் கேடுபாடுகளையும் குறித்து எழுதினர். ஆனல் அவையுளும் 'ஆண்டவன்' முத்திரை பொறிக்கப் பட்டே அரங்கேற்றமாகும். இவ்விடைக்காலப் புலவர் வழித் தோன்றலாகிய இவர்கவித்திறம் வியக்கத் தக்கதாகும்.

சேதுபதி சமஸ்தானத்தில் ஒரு நாள் ஒரு புலவர் நூலொன்று எழுதி அதனை அரங்கேற்றக் கொண்டுவந்தார். அரங்கேற்றம் தொடங்கும் பொழுது, அவையிலே அந்தகர் ஒருவர் இருப்பது 'அமங்கலம்' எனக்கூறி மாம்பழக் கவிச்சிங்க நாவலர் அவையைவிட்டு மறைவாக வேண்டும் என்று, வந்த புலவர் கூறுவாராயினர். அதுபோது சினம்கொண்ட கவிச்சிங்க நாவலர் சேதுபதி அரசரைப் பார்த்து, "இந்தப் புலவன் எழுதிக்கொண்டு வந்திருக்கும் நூல் முன்னர் தான் எழுதியது என்றும், அதிலுள்ள பாட்டுடைத் தலைவன் பெயரை மட்டும்மாற்றி நூலாக்கிக்கொண்டு வந்துள்ளார்: ஆதலின் நான் கேட்டால் கூடாது என்று கூறுகின்ருர்" என்று மொழிந்தார்.

இதுகண்ட அரசர் அவர் முன்னே படித்துக் காட்டப் பணிக்கவும், புலவர் அதனைப் படித்து முடித்தார். படித்து முடித்தவுடன் நாவலர் அந்த நூல் முழுமையும் மளமளவென ஒப்புவித்தார்! அவையிலுள்ளோர் வியந்தனர். அவருக்குச் செவிபுலன் ஆற்றல் மிகுந்திருந்ததால்இந்த வியக்கத்தக்கச்செயல் செய்தார். வந்த புலவரும் கவிச்சிங்க நாவலர் தாள்பணிந்து தன் குற்றத்தை மறந்து மன்னித் தருள வேண்டினர்.

அவைக்களம் புலவராய்விளங்கிய கவிச்சிங்க நாவலருக்கும் அரசருக்கும் ஏற்பட்ட மனத்தாங்கல் காரணமாக அவர் அரசவை விட்டு வெளியேறி வந்தார். அதுபோது தான் "உடுமலைச் சரபம் முத்துசாமிக் கவிராயர் அவருக்கு மாணவர் ஆனர்.

கவிச்சிங்க நாவலர் எழுதிய நூல் பிரபந்தத் திரட்டாக வெளியிடப்பெற்றது. சந்திர விலாசம் சிங்கார சமஞ்சரி (1873–ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்றது) போன்ற நூல்களை எழுதினர். சிற்றின்பச் சுவை சேர்ந்த இவர் நூல்கள் இப்பொழுது அச்சில் இல்லை. இன்று வழக்கிலும் இல்லாத நிலையேற்பட்டுள்ளது. அவர் எழுதிய 'சிங்கார ரச மஞ்சரி' கருத்துச் செறிவும் நகைச்சுவையும், சிற்றின்பச் சுவையும் மிக்கதாகும். எழில் மிக்க விருத்தங்களினுலிலக்கணமும்' கவித்துறையால் அவைகட்கேற்ற பெருமையிலக்கியமும் அமையப் பொருவரு சிங்கார ரச மஞ்சரியை எழுதியுள்ளார். "சீர் புனைமடவர் சிறப்பிலக்கணமும் தார்புனை மார்பத் தலைவர்களியல்பும்" இதில் கூறப்பட்டுள்ளது. வடமொழியில் நாயக நாயகியர் சிறப்பும், இயல்பும் கூறும் நூலின் கருத்தை வைத்துக் கொண்டு அவர்தம் பண்பினை சுவைசொட்டப் பாடியுள்ளார். நல்லகற்பனையும், நயமும், சுவையும், சொல் நலமும் கொண்ட அவற்றிடை சிற்றின்பக் கதைகளும் இணைந்து வருகின்றன.

பொக்காஷியோ என்ற இத்தாலிய நாட்டு எழுத்தாளன் எழுதிய டெக்கமரான் என்ற நூலில் வரும் கதைகளும் (தடை செய்யப்பட்டு மீண்டும் தடை நீங்கப்பெற்ற நூல்) இதில்வரும் நிகழ்ச்சிகளும் ஏறத்தாழ ஒற்றுமையுடையன.

அவர் கற்பனைக் காரிகையரில் அறுவர்தான் மேலேயுள்ள ஆறு நாயகிகள்!]

மாய்கின்றேன் – – உனைக்காணுமல்!

"புதுமதியன்"

எட்டாம் நாள் நிலவு வானில்
எழுந்தேகி முகிலாம் வெண்மைப்
பட்டாடை போர்த்துக் கொண்டு
பனியைத் துவக்கும் வேளை!
மொட்டோடு மோதித் தென்றல்
மலர்தந்த முழும ணத்தைக்
கட்டோடு தூக்கிச் செல்லும்
காவலன் அரண்ம னைக்குள்!

சோலையோன் றரண் மனைக்குச்
சொந்தமாய்ப் பின்னு லுண்டு
பாலைப்போல் ஒளிவெள் ளத்தைப்
பரப்பிடும் பளிங்குக் கல்லில்
சீலம்சேர் சிற்பி கையின்
சிற்றுளி அமைத்த வண்ண
வேலைப்பா டமைந்த தான
வேனில்மண் டபமொன் றுண்டு.

மண்டபப் படிக்கட் டின்மேல்
மனத்துய ருடன மர்ந்து
கொண்டொரு இளைஞன் சோகம்
குரலிலே வழிய விட்டுப்
பண்ணென்றைப் பாடிக் கொண்டு
பால்பொங்கும் நிலவைக் கண்டு
கண்ணீரை வடிய விட்டான்
கழிந்ததை எண்ணி நொந்தான்.

"ஊற்றுநீர் கலக்கும் ஆற்றில்;
உவரியில் கலக்கும் ஆறு
காற்றேடு மணங் கலக்கும்
காண்கின்றேன் இவைகள் எல்லாம்
போற்றிடும் இயற்கைச் செய்கை
பொருந்திய இரண்டின் சேர்க்கை!
மாற்றிடற் கில்லா நெஞ்சால்
மாய்கின்ற உன்னை யெண்ணி

மலையுச்சி நெடுவா னத்தை
மகிழ்முத்த மிடுதல் கண்டேன்
அலையொன்றை யொன்று கட்டி
அணைப்பதைக் கண்டேன்; வண்டு
மலரிதழ் வருடல் கண்டேன்
மதியொளி குமுதம் தன்னை
மலர்த்துதல் கண்டேன் ஆனல்
மாய்கின்றேன் உனைக்கா ணுமல்!"

யார், யாரை அழைப்பது?

★

"ஆச்சாரியார் வயதிலும் பெரியவர்; அறிவிலும் பெரியவர்; மகாமேதை; ராஜதந்திரி! அவருக்கு மரியாதை தர தயாராயிருக்கிறேம்! ஆனல் அவர் நிலை அறிந்து பேசவேண்டும்என்ருர். புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சுதந்திராக்கட்சி பிழைக்குமா? பிழைக்காதா? பிழைத்தாலும் நிலைக்குமா? என்பது ஆரம்பித்தவர்களுக்கே ஐயம் தீர்ந்தபாடில்லை.

இந்த நிலையில் பத்தாண்டுக்கு முன் தோன்றி, எதிர்ப்பையும், ஏசலையும் தாங்கி, எவராலும் அழிக்கமுடியாத நிலையில்விழுதுவிட்டு வளர்ந்துள்ள புகழ்மிக்க தி. மு. க. ஆலமரத்தைப்பார்த்து காளான் நிலையில் உள்ள ஒரு கட்சியை வைத்திருக்கிற ஆச்சாரியார் அழைப்பு விடுப்பது அதிகப்பிரசங்கித்தனம் மட்டுமல்ல அதுஒரு அநாகரீகச்செயலாகும்.

— ஈ. வீ. கே. சம்பத், எம். பி.

★

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

அடிக்கடி உளறினன் தூக்கத்தில். "அந்தக் காக்கிஉடையைக் கொடுங்கள். எனது ஆருயிர் தலைவர் வாஷிங்டன் எனக்கு வெற்றி பதக்கம் அணிவித்தாரே அந்த உடையை அளியுங்கள்" எனக்கதறிக்கொண்டே மாண்டான்.

அர்னுல்டின் வரலாறு, ஆரணங்குகளின் அஸ்திரத்தின்முன் ஆற்றலாளர்கள் பணிந்த வரலாறுகளின் ஒரு துணுக்கு. துடியிடையாள் ஒருத்தியால்துரோகியான ஒரு தூயவனின் சரிதை அமெரிக்க விடுதலை வரலாற்றிலேயே கண்ணீரைக் கொப்பளிக்கச் செய்யும் சம்பவமாகும்.

இலஞ்சம் இருபதாயிரம்!

பிலடல்பியா நகரின் நடன அரங்கங்களிலே, வளைந்தும் நெளிந்தும், சிரிப்பைச் சிந்திவிட்டு சிங்காரம் காட்டித் திரிந்தாள் ஒரு நளினி. அவளது கரங்களிலே விடுதலை வீரர்களின் 'தலைவிதி' தத்தளித்தது. மார்கரெட் பைக்கி ஷிப்பன் என்பது அவளது திருநாமம். அந்த அழகியின் நீலோற் பலவிழிகள் நேத்திரானந்தமாய் அமைந்தனவே தவிர நெஞ்சில் சதிராடும் சதித் திட்டங்களை எடுத்து இயம்பவில்லை. அவளது தந்தை எட்வர்டு ஷிப்பன் என்னும் சீமான் ராஜவிசுவாசக் கட்சியை சேர்ந்தவன். அத்தரிலே அவனுக்கு அபார பிரேமை. அந்த உல்லாச சுந்திரன் தனது மகளை பெரிய இடங்களிலே உலவவிட்டான். பிரிட்டிஷ் ராணுவ தளகர்த்தர்கள் இந்த மெல்லியாளிடம் மண்டியிட்டனர். அவளது சுருள் சுருளான கேசமும் சுந்தர வதனமும் அவர்களைச் சொக்கச் செய்தன. அவளும் அவர்களின் பளபளப்பான ராணுவ உடையில் சிந்தை சோர்ந்தாள். அவளது வளைந்த புருவங்களுக்கு வகை வகையான காவியம் புனைந்தனர். கிண்டலுக்குப் பேர் போன ஒரு குறும்புக்காரகிழவர் சொன்னார். "பெக்கி எந்த நடன அரங்கத்திலிருந்தாவது திரும்புகிறாள் என்று வைத்துக்கொள்ளுங்கள்; அவள் அங்கே விரிக்கப்பட்டிருக்கும் இரத்தின ஜமக்காளத்தின்மீது நடப்பதில்லை. அவளது அழகில் மயங்கியவர்களின் நொறுங்கிப்போன இதயங்களின்மேல் அடியெடுத்து வைத்தே நடப்பாள்" என்று! பெக்கிக்கு பொன்னில், பொருளில், பேரக போக்கியத்தில் மனம் லயித்திருந்தது. சீமானை மணக்க வேண்டும், செருக்காக வாழவேண்டும் என சித்திரம் தீட்டினாள். ஜான் ஆண்டர் என்னும் ஆணழகன் பிலடல்பியாவில் தங்கியிருந்த பிரிட்டிஷ் ராணுவத்தில் முக்கிய அங்கம் வகித்த அரும்புமீசை வாலிபன். அவனும் இவளும் ஆனந்த ஜோடிகளாயினர். வானவெளியில் சின்னாட்கள் இன்பமாகப் பறந்தனர்.

"அடக்கமாக வாழ வேண்டுமம்மா!" என்றான் தந்தை.

"போங்கப்பா! உங்கள்பெண் கெட்டிக்காரி. அவளுக்குத் தெரியும் அவள் ஆற்றல்," என்று சொல்லிவிட்டு ஓரக் கண்ணால் பார்த்துவிட்டு மறைந்தாள் பெக்கி.

அப்போது பிலடல்பியாவில் பிரிட்டிஷார் இல்லை. அவர்களது சிவந்த ராணுவ உடை நடன அரங்குகளிலே காணேம். விடுதலை வீரர்களின் நீலஉடைதென்பட்டது. பெக்கி ஷிப்பன் ஆரம்பத்தில் மனக் கலக்கம் அடைந்தாள். ஆனால் ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் கொக்கிற்கு வழிவகையா தெரியாது? பெக்கி அத்தகைய வல்லமைமிக்க வனிதா ரத்தினமல்லவா! அவளை வட்டமிட்டவர்களிலே, முப்பத்தைந்து வயது நிரம்பிய தளபதி, போர்க்குணம் கொண்டோன், கருவிழிகளால் அனைவரையும் கவர்ந்த ஒரு காந்தசக்திக்காரன் தென்பட்டான். அவன் கால் நொண்டியாக இருந்தது. அவன் தான் குயூபெக் போராட்டத்தில் கொட்டுமுரசு எனக் கொடி உயர்த்தியவன். சரடோகாசமர்க்களத்தில் சளைக்காது போராடி சன்னத்துப்பெற்ற அஞ்சா நெஞ்சன். அவன் வருகிறான் என்றால் 'ஹூஸ்' என்ற சப்தத்துடன் நிசப்தம் தொடரும்; வாயில் காப்போன் "மேஜர் ஜெனரல் அர்னால்டு வருகிறார்" என்று தெரிவிப்பான்.

அந்த அர்னால்டு பிலடல்பியாவின் ராணுவ கவர்னர். வெள்ளிப்பூண் போட்ட பிரம்பைசுழற்றிக்கொண்டுஉலவினான். அவன் கண்களில் விம்மும் மார்பகமும், வேல்விழியும் கொண்ட பெக்கி ஷிப்பன் பட்டுவிட்டாள். நாடகம் ஆரம்பமாகியது. அமெரிக்க விடுதலைப் போராட்டத்திலே சுவையும் பயங்கரமும் நிறைந்த பகுதி நடித்துக்காட்டப்பட்டது.

★

ஜெனரல் அர்னால்டு அவனது கனவுலக் காரிகையை கண்டுவிட்டான். அழகின் இலக்கணம் பெக்கி கூர்ந்து கவனித்தாள். அனுதாபமாக நடந்தாள். அந்த விடுதலை வீரனின் மனதிலே விஷத்தைத் தூவினாள். வாஷிங்டனுக்கே பொருமை என்று பொல்லாங்கு சொன்னாள். விஷம் வேலை செய்யத் தொடங்கியது. அர்னால்ட் ஆசை நாயகியை இல்லக் கிழத்தியாக்க விருமபினான். அவள் தந்தை விரும்பவில்லை. அவள்கூட நல்ல வாலிபனை மணந்திருக்க முடியும். ஆனால் அர்னால்டின் கருவிழிகள் அவளை கட்டுண்ட நாகமாக்கியது. அவன் தந்த கட்டாணி முத்தம் அவளை போதையிலாழ்த்தியது. திருமணம் நடைபெற்றது. ஆனால் அமெரிக்க சுதந்திரம் என்ற காட்டு ரோஜாவை அளிக்கும் கள்ளி அவள் உள்ளத்திலே வளர ஆரம்பித்தது.

புதுக் குடித்தனம், வறுமையின் தாண்டவம் — பெக்கியை அலைக்கழித்தது. அவள் வாட்டம் அவன் உறுதியைக் குலைத்தது. அந்த ஆடம்பரவல்லியோ கணவனை பிரிட்டிஷாருக்கு விலை பேசும் வேலையில் ஈடுபட்டாள். அவளும் அவளது ஆரம்பநாள் காதலன் ஆண்டரும் பலநாள் கடிதப் போக்குவரத்து நடத்தி கடைசியாக சரடோகா வீரன் அர்னால்டு பிரிட்டிஷ் பவுனுக்காக விலைபேசி விற்கப்பட்டான்.

[upper columns 3–4 resume:]

தால் ஆண்டர் நேரில் சந்திக்க ஏற்பாடாகியது. வல்சர் என்னும் போர்க் கப்பலில் ஆண்டர் மேற்கு முனைக்கு வந்தான். நதியிலே கப்பல். சதிகாரன் அர்னால்டின் மாளிகையில். வேறூர் தளபதி பிரிட்டிஷ் போர்க்கப்பலைப் பார்த்துவிட்டான். சுட உத்தரவிட்டான். போர்க்கப்பல் புறப்பட்டது, ஆண்டரைக் கரையிலே விட்டுவிட்டு. இரகசியத் திட்டத்தைப் பெற்றுக்கொண்டதும் ஆண்டர் கரையோரம் வருகிறான். கப்பலைக் காணேம். நிலத்திலேயே போவது சிக்கல் நிறைந்த காரியம். என்ன செய்வது? குதிரை மீதேறி முன்பின் பழக்கமில்லா கானகத்திலே செல்கிறான். திசை மாறுகிறது. ஆரண்யத்தின் மத்தியில் கொள்ளைக்காரர்கள் கையில் சிக்குகிறான். அவர்கள் சோதனையில் இவன் சதித்திட்டம் கண்டுபிடிக்கப்படுகிறது. ஏதேதோ சொல்கிறான். பணம் கொட்டித் தருவதாக முறையிடுகிறான். ஆனால் அந்தக் கொள்ளைக்காரர்கள் வடக்குக்கோட்டை தளபதியிடம் அவனை ஒப்படைக்கின்றனர். அதே நேரம் வாஷிங்டன் அர்னால்டை சந்திக்கவந்துக் கொண்டிருந்தார். அர்னால்டிற்கு சேதி எட்டுகிறது. உள்ளே சென்று படகின்மூலம் பிரிட்டிஷாரிடம் தஞ்சமடைகிறான். வாஷிங்டன்

தூயவன் ஒருவன் துரோகியான வரலாறு!

அந்த அலங்காரவல்லியிடம் தஞ்சம் புகுந்திருப்பதாகக் கருதினான். அந்த கொக்குமனம் படைத்த கோமளவல்லிக்கும், அவளது கதாநாயகன் அகப்பட்டுவிட்டான். அர்னால்டுக்கு வாலிபம் திரும்பியது. திராட்சைப் பந்தலின் கீழ் அத்தேன் மொழியாள் உதட்டுடன் இவன் உதடு உறவாட, நிலா முற்றங்களில் அவள் கொல்லும் விழிகளிலிருந்து கிளம்பும் வேல்களுக்கு இந்த ரண கள சூரன் ஆற்றாது அயர்ந்துவிழ காதல் காட்சிகள் நடைபெற்றன.

அர்னால்டின் நடவடிக்கைகள் அனைவருக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்தன. ராஜவிசுவாசிகளுடன் அவனது உறவு பலருக்குப் பிடிக்கவில்லை. அவனது ஆடம்பரச் செலவு கடனாளியாக்கியது. அருமைக் காதலி பெக்கியிடம் ஒருநாள் மனம் திறந்து பேசினான். எத்தகைய நன்றி கெட்ட நாட்டிற்கு அவனதுவாலிபத்தையும் ஆற்றலையும் காணிக்கையாக்கினான். காங்கிரஸ் அவனுக்கு இன்னும் நான்கு ஆண்டு சம்பளம் பாக்கி கொடுக்கவேண்டியிருந்தது அதோடு அவனைக் குற்றமும் சாட்டியது.

K.A. மதியழகன்

அர்னால்டு சொன்னான்; அதை அவள் எழுதினாள்.

"மேற்கு முனையை பிரிட்டிஷ் தளபதி ஆக்கிரமிக்கும் வழிவகையைச் சொல்லுகிறேன். அதன்படி அங்குள்ள ஆயுதக் கிடங்கு, காலாட்படை அத்தனையும் பிரிட்டிஷ் உடமையாகும். இவ்வளவு பெரிய காரியத்திற்கு எனக்குக் கொடுக்க வேண்டிய தொகையெல்லாம் இருபதாயிரம் பவுன்தான்!

—இப்படிக்கு, அர்னால்டு"

இதைச் சொல்லும்போது அந்த விடுதலை வீரனின் நா எப்படிக் குளறியதோ! படிக்கும்போது கண் எப்படிக் கூசியதோ! ஆனால் பெக்கியின் கன்னங்களில் தவழ்ந்த குமிழ் சிரிப்பு அவனை இவைபற்றி எண்ணத் தூண்டவில்லை. வாஷிங்டனிடம் மன்றாடிப் பெற்று மேற்கு முனையின் தளகர்த்தனாக நியமிக்கப்பட்டான்.

ஆண்டரும் பெக்கியும் சதித்திட்டத்தை உருவாக்கினார்கள். கடிதங்களால் காரியம்முடிவதாயில்லை என்ற

கடிதத்தை வாசிக்கிறார். பொல பொல வென்று கண்ணீர் உகுக்கிறார். பல்லை 'நற நற' வென்று வென்று கடித்துக்கொண்டு அங்கும் இங்கும் உலவுகிறார்.

"அர்னால்டு துரோகி! பிரிட்டிஷாருககுக் கங்காணியாகிவிட்டான். இனி நாம் யாரைத்தான் நம்புவது" அவரது வார்த்தைகளில்ஆவேசம் கொப்பளிக்கிறது. பெக்கி பித்துப் பிடித்தவள்போல் நடித்து, வாஷிங்டன் அனுதாபத்தைப் பெற்று தந்தைவீடு சேர்ந்தாள். ஆண்டர் தூக்கிலேதொங்கினான். அந்த் சோக நாடகத்தின் முதல் குற்றவாளிக்கு பிரிட்டாஷார் ஆருயிரம் பவுனும் பிரிகேடியர் வேலையும் தந்தனர். சுதந்திரப் போராட்டம் முடியும்வரையில் அமெரிக்கக் கடற்கரையிலே கொள்ளையடித்துத் திரிந்தான. இங்கிலாந்துதிரும்பியதும்பெக்கி சாம்ராஜ்யத்திற்காக செய்த சேவைக்காகபாராட்டப்பட்டாள். பரிசுபெற்ருள். அர்னால்டு துரோகி என்று சின்னஞ்சிறுவர்களாலும் காறி உமிழப்பட்டான். ஆங்கில உலகில் அன்றுமுதல் துரோகி என்பதற்கு அர்னால்டு என்பது சொல்லாக மாறியது.

அவனது கடைசி நாட்கள் பரிதாபமாக இருந்தன. அவனே

(6-ம் பக்கம் பார்க்க)

மேயர் தேர்தல்!

மேயர் இருக்கையில் புதியமேயர் திரு. எம். எஸ். அப்துல்காதர் அவர்கள்

கொள்கை வீரனுக்கும் குபேரபுரியானுக்கும் மற்போர்!

கடந்த திங்கட்கிழமையன்று நடைபெற்ற சென்னை மாநகராட்சி மன்ற மேயர் தேர்தலில் புதிய மேயராக வெற்றி பெற்ற தி. மு. க. உறுப்பினர் தோழர் எம். எஸ் அப்துல்காதர் அவர்களையும் துணைமேயராக வெற்றிபெற்ற தோழர் என். எஸ். தேவராஜன் அவர்களையும் வாழ்த்தி வரவேற்பதில், "தென்னகம்" பெருமை கொள்கிறது.

'அரண்மனையிலே இருந்த கட்சியை ஆலமரத் தடிக்கு கொண்டு வந்துள்ளேன்' என்று முன்பொருநாள் அறிஞர் அண்ணா அவர்கள் நாட்டு மக்களிடம் கூறினார்கள். கட்சியை மட்டுமல்ல, மக்களும் அரண்மனைக்குப் பக்கத்திலேயில்லை. அவர்களையும் அழைத்து கொண்டு வந்து விட்டார் என்பதற்கு சான்றாக அமைந்துள்ளது. இருபத்தெட்டு பிராயமுடைய இளைஞர் திரு. எம். எஸ். அப்துல் காதர் அவர்கள் மேயராக தேர்ந்தெடுககப் பட்டுள்ள தித்திக்கும் சம்பவம்.

இதற்கு முன்னால் இவ்வளவு சிறு வயதுடைய இளைஞர் மேயர் ஆசனத்தை அலங்கரித்ததில்லை. செட்டிநாட்டரசர் முத்தையா செட்டியார் மட்டும் ஏறக்குறைய இதே வயதுடைய காலத்தில் மேயராக இருந்துள்ளார் என்று பத்திரிகைகள் எழுதுகின்றன. ஆனால் பெரும் வித்தியாசம் உண்டு. ராஜசர் முத்தையா செட்டியார் அரண்மனையிலே தாலாட்டப்பட்டு பாரட்டப்பட்டு அதன் அரவணைப்பிலே, அதுதரும் அதிகாரச் செல்வாக்கிலே அந்த ஆசனத்தில் அமர்ந்தார். இன்று அறிஞர் அண்ணா அவர்கள் அந்தஅதிகாரச் செல்வாக்கை ஆலமரத் தடியிலே யுள்ளவர்களிடம் வாங்கித் தந்துள்ளார். மேயராக வெற்றி பெற்றுள்ள திரு. அப்துல்காதர் சாதாரண நடுத்தர குடும்பத்தைச் சார்ந்தவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றியும், அதனைச் சார்ந்துள்ள எண்ணற்ற இளைஞர்களின் மீது அறிஞர் அண்ணா அவர்களின் பிடிப்பு எத்தகையது என்பதையும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற நம் கோட்பாடு வெறும் எழுத்துக் கூட்டங்களல்ல என்பதையும் மமதை மலையிலே அமர்ந்து கொண்டு பணநாதன் அருளாலேயே ஜனநாயகத்தை தனதுபணிப் பெண்ணாக்கி விடலாம் என்று மனப்பால் குடித்த காங்கிரசுக்கு இந்த தேர்தல் நிகழ்ச்சி நிரூபித்து விட்டது. நகரமன்றத் தேர்தலில் பெருவாரியான வாக்குகளை பெருத காங்கிரஸ் மேயர் தேர்தலில்போட்டியிட நினைத்ததே ஒரு குற்றம்.

சுயேட்சைகளை விலைககு வாங்கியது இரண்டாவது குற்றம்.

திராவட முன்னேற்றக் கழகத்தில் இருப்பவர்களை, அதற்கு ஆதரவாக இருப்பவர்களை இழுத்துவிடலாம் என்று தப்புக் கணக்குப் போட்டது மூன்ருவது பெருங் குற்றம்.

தேர்தலிலே போட்டியிட்டது மன்னிக்க முடியாத நாலாவது குற்றம்!

குபேர புரியானுக்கும்கொள்கை வீரனுக்கும் நடைபெற்ற மற்போராக இந்த தேர்தல் அமைந்தது. கொள்கை வீரன் வென்ருன். குபேர புரியான் குப்புற வீழ்ந்தான்.

சரியான எதிர்க்கட்சி இல்லையென்றுநாளும் குறைபட்டுக் கொள்கிருர்கள். அப்படிப்பட்ட வாய்ப்பை சென்னை நகரமன்றம் காங்கிரசிற்கு வழங்கியுள்ளது. அது கசப்பதேன்?

முந்தின நாள்மாலை வேலூர் நகரமன்றத்தில், நகரசபை நிர்வாகத்தில கட்சி வித்தியாசம் பாராட்டக் கூடாது என்று வேதாந்தம் பேசுகிருர் முதலமைச்சர் காமராசர். மறுநாள் சென்னையில் இரும்புப் பெட்டியின் சக்திக்கு சோதனை நடைபெறுகிறது! ஜனநாயகமே! நீ இவ[illegible]ரிடமிருந்து தப்ப வேண்டும்.

அண்ணா அவர்கள் மீது கொண்டுள்ள பெருநம்பிக்கைக்கும், சபலத்திற்கு ஆட்படாத உறுதிப்பாட்டிருக்கும், இந்த வெற்றிக்கு பொறுப்பான அனைவருக்கும் நாடு நன்றி செலுத்துகிறது. பாராட்டுகிறது.

புதிய மேயராக பொறுப்பேற்றிருக்கும் திரு. எம். எஸ் அப்துல்காதர் படித்துப்பட்டம் பெற்ற இளைஞர். திராவிட முன்னனற்றக் கழக போராட்டங்களில் சிறைக் கோட்டம் நண்ணியவர். அடக்கமும் கனிவான உள்ளமும் துடி துடிப்பான சுபாவமும்உடைய இளைஞர். அவரது ஆர்வமும் ஆற்றலும் நகருக்கு நல்ல பணிகளைச் செய்வதில் பேருதவி புரியும்என்றநம்பிக்கை நமக்கு நிறைய உண்டு.

துணை மேயராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள திரு. என் எஸ். தேவராசன் அவர்கள் அமைந்தகரை பகுதியின் நகரசபை உறுப்பினர். பால் போன்றஉள்ளமும், பண்புடன் பழகும் பக்குவமும், கொள்கையில் குன்ருதபற்றும் படைத்த வாலிபர். கழகப் பணியிலும், பொதுத் தொண்டிலும் நீண்ட நாள் பயிற்சி பெற்றவர்.

இவர்களுடைய பதவிப் பருவம் சென்னைக்கு மேலும் சீரையும் சிறப்பையும் தேடித் தரட்டும்.

ஏற்கெனவே மேயராகவும் துணை மேயராகவும் பணியாற்றிய திரு. அ. பொ. அரசு அவர்களும், திரு. சிவசங்கரன் அவர்களும் நல் பல பணிகளை துவக்கிவைத்துள்ளார்கள். குறுகிய காலத்தில் கழகத்திற்கு நற்பெயரையும் சிறப்பையும் தேடித்தந்துள்ளார்கள். அவர்கள் அனுபவமும் பயிற்சியும் புதிய மேயருக்கும் துணை மேயருருக்கும் முன் மாதிரியாக அமையும் என நம்புகிறோம்.

மேயர் திரு. எம். எஸ். அப்துல்காதர்அவர்களையும் துணை மேயர் திரு. என். எஸ். தேவராசன் அவர்களையும் மீண்டும் வாழ்த்தி அவர்கள் மகிழ்ச்சியில்பங்கு கொள்கிறோம்.



துணைமேயர் இருக்கையில் புதிய துணைமேயர் திரு. என். எஸ் தேவராசன்

அச்சிடுபவர்: கே. இராசாராம், பி.ஏ., கஸ்தூரி லித்தோ ஒர்க்ஸ், 34. சின்னத்தம்பி தெரு, சென்னை-1.
ஆசிரியரும், வெளியிடுபவரும்: கே. ஏ. மதியழகன், பி.ஏ., 126, மவுண்ட் ரோடு சென்னை-6.